அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 12/93

எனது இல. 111/309ஈ/207/29/டீசி
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம் - கொழும்பு. 07
1993 ஜூன் மாதம் 07ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

மோட்டார் வாகனச் சாரதிகள் கடமையாற்ற
வேண்டிய மணித்தியாலங்கள்.

மோட்டார் வாகனச் சாரதிகளுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு பற்றி வெளியிடப்பட்ட 1979, ஜூன் 26ஆந் திகதிய 318ஆம் இலக்கத் தாபன சுற்றறிக்கைக் கடிதத்துக்கு உங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. மோட்டார் வாகனச் சாரதிகளின் வழமையான கடமை மணித்தியாலங்கள் இத்தால் திருத்தப்படுகின்றன.

(i) ஐந்து வேலை நாட் கிழமைக்கு உரித்துடைய சாரதிகள் மதிய உணவுக்கான ஒரு மணித்தியாலம் உட்பட நாளொன்றுக்கு பத்து மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும்.

(ii) ஆறு வேலை நாட் கிழமைக்கு உரித்துடைய சாரதிகள் மதிய உணவுக்கான ஒரு மணித்தியாலம் உட்பட நாளொன்றுக்கு எட்டரை மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும்.

(iii) சனிக்கிழமைகளில் வேலை செய்ய வேண்டிய சாரதிகள் சனிக்கிழமைகளில் ஏழரை மணித்தியாலங்கள் வேலை செய்து கிழமைக்கு 50 மணித்தியாலங்கள் நிறைவு செய்ய அனுமதிக்கப் படுவார்கள்.

இக்கடமைக்குரிய மணித்தியாலங்கள் எல்லா வகை வாகனங்களுக்கும் ஏற்புடையன.

03. இச்சுற்றறிக்கை திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: கே. எச். கமிலஸ் பெர்ணான்டோ.
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.